## ஏப்ரல் – 04 – வியாழன்

### புனித இசிதோர் - ஆயர், மறைவல்லுனர்

**தங்களை விடுவித்த இறைவனை மறந்தனர்: எகிப்தில் பெரியன புரிந்தவரை மறந்தனர்: திபா. 106:21**

### முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 32 : 7 – 14

அந்நாட்களில் சீனாய் மலையில், ஆண்டவர் மோசேயை நோக்கி, "இங்கிருந்து இறங்கிப்போ. நீ எகிப்திலிருந்து நடத்திவந்த உன் மக்கள் தங்களுக்குக் கேடு வருவித்துக்கொண்டனர். நான் கட்டளையிட்ட நெறியிலிருந்து இதற்குள்ளாகவே விலகி அவர்கள் தங்களுக்கென ஒரு கன்றுக் குட்டியை வார்த்துக் கொண்டார்கள். அதற்கு வழிபாடு செய்து, பலியிட்டு, "இஸ்ரயேலே, எகிப்து நாட்டினின்று உன்னை நடத்தி வந்த தெய்வங்கள் இவையே" என்று கூறிக் கொள்கிறார்கள்" என்றார். மேலும் ஆண்டவர் மோசேயிடம், "இம் மக்களை எனக்குத் தெரியும் வணங்காக்கழுத்துள்ள மக்கள் அவர்கள். இப்போது என்னை விட்டுவிடு. அவர்கள்மேல் என் கோபக்கனல் மூண்டிருப்பதால் நான் அவர்களை அழித்தொழிக்கப் போகிறேன் உன்னையோ பேரினமாக்குவேன்" என்றார். அப்போது மோசே தம் கடவுளாகிய ஆண்டவர்முன் மன்றாடி, "ஆண்டவரே, மிகுந்த ஆற்றலோடும் வலிமைமிகு கரத்தோடும் நீர்தாமே எகிப்து நாட்டிலிருந்து கொண்டுவந்த உம் மக்களுக்கு எதிராக உம் கோபம் மூள்வது ஏன்? "மலைகளில் அவர்களைச் சாகடிப்பதற்கும் மண்ணிலிருந்து அவர்களை அழித்தொழிப்பதற்குமாக வஞ்சகமாய் ஆண்டவர் அவர்களைக் கூட்டிச் சென்றார்" என்று எகிப்தியர் சொல்ல இடம் தருவானேன்? உமது கடுஞ்சினத்தை விட்டுவிட்டு உம் மக்களுக்குத் தீங்கிழைக்கும் எண்ணத்தை மாற்றிக் கொள்ளும். உம் அடியாராகிய ஆபிரகாமையும், இஸ்ரயேலையும் நினைந்தருளும். நான் உன் வழிமரபினரை விண்மீன்கள் போல் பெருகச் செய்வேன். நான் வாக்களித்த இந்நாடு முழுவதையும் உன் வழிமரபினருக்கு அளிப்பேன் அவர்கள் அதை என்றென்றும் உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர் என்று நீராகவே அவர்களுக்கு ஆணையிட்டு அறிவித்துள்ளீரே" என்று வேண்டிக்கொண்டார். அவ்வாறே ஆண்டவரும் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தம் மக்களுக்குச் செய்யப்போவதாக அறிவித்த தீங்கைச் செய்யாது விட்டுவிட்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது இரக்கத்திற்கு ஏற்ப என்னை நினைவுகூரும்

### நற்செய்தி : யோவான் 5 : 31 – 47

அக்காலத்தில் இயேசு யூதர்களிடம். "என்னைப்பற்றி நானே சான்று பகர்ந்தால், என் சான்று செல்லாது. என்னைப்பற்றி சான்று பகர வேறு ஒருவர் இருக்கிறார். என்னைப் பற்றி அவர் கூறும் சான்று செல்லும் என எனக்குத் தெரியும். யோவானிடம் ஆளனுப்பி நீங்கள் கேட்டபோது அவரும் உண்மைக்குச் சான்று பகர்ந்தார். மனிதர் தரும் சான்று எனக்குத் தேவை என்பதற்காக அல்ல் நீங்கள் மீட்புப் பெறுவதற்காகவே இதைச் சொல்கிறேன். யோவான் எரிந்து சுடர்விடும் விளக்கு. நீங்கள் சிறிது நேரமே அவரது ஒளியில் களிகூர விரும்பினீர்கள். "யோவான் பகர்ந்த சான்றை விட மேலான சான்று எனக்கு உண்டு. நான் செய்து முடிக்குமாறு தந்தை என்னிடம் ஒப்படைத்துள்ள செயல்களே அச்சான்று. நான் செய்துவரும் அச்செயல்களே தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்பதற்கான சான்றாகும். "என்னை அனுப்பிய தந்தையும் எனக்குச் சான்று பகர்ந்துள்ளார். நீங்கள் ஒருபோதும் அவரது குரலைக் கேட்டது மில்லை. அவரது உருவைக் கண்டதுமில்லை. அவரது வார்த்தையும் உங்களுக்குள் நிலைத்திருக்கவில்லை. ஏனெனில், அவர் அனுப்பியவரை நீங்கள் நம்பவில்லை. மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என எண்ணி அதனைத் துருவித் துருவி ஆய்ந்து பார்க்கிறீர்களே! அம் மறைநூலும் எனக்குச் சான்று பகர்கிறது. வாழ்வு பெறுமாறு என்னிடம் வர உங்களுக்கு விருப்பம் இல்லை. "மனிதர் தரும் பெருமை எனக்குத் தேவையில்லை. உங்களை எனக்குத் தெரியும். உங்களிடம் இறையன்பு இல்லை. நான் என் தந்தையின் பெயரால் வந்துள்ளேன். ஆனால் என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வேறொருவர் தம் சொந்தப் பெயரால் வருவாரானால் அவரை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது, ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே! உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்?. தந்தையின் முன்னிலையில் உங்கள் மேல் குற்றம் சுமத்தப்போகிறவன் நான் என நினைக்காதீர்கள். உங்கள் சார்பாக நிற்பார் என நீங்கள் எதிர்பார்க்கும் மோசேயே உங்கள் மேல் குற்றம் சுமத்துவார். நீங்கள் மோசேயை நம்பியிருந்தால் என்னையும் நம்பியிருப்பீர்கள். ஏனெனில் அவர் என்னைப்பற்றித் தான் எழுதினார். அவர் எழுதியவற்றை நீங்கள் நம்பவில்லை என்றால் நான் சொல்லுபவற்றை எவ்வாறு நம்பப் போகிறீர்கள்?" என்றார்.

**தியானம் :** "பயணம் என்பது மேடு பள்ளம், இன்பம் துன்பம் இவைகளை ஏற்று யாவற்றையும் கடந்து செல்வது தான் சிறந்தவொரு பயணம். இன்றைய முதல் வாசகத்தில் இறைவனின் வாக்கின்படி மோசே இஸ்ராயேல் மக்களை பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்திற்கு அழைத்து வருகின்றார். ஆனால் அவர்களோ இறைவன் எங்களை மீட்டுள்ளார். எவ்வாறான சூழ்நிலையிலும் அவர் எங்களை வழிநடத்துவார் என்பதை மறந்து தங்களுக்கு என்று கன்றுக் குட்டியை வளர்த்து வணங்கி வந்தனர் (வி.ப. 32:8) சினங்கொண்ட இறைவன் அவர்களை அழித்துவிட தீர்மானிக்கின்றார். மோசேயிடம் தெரிவுக்கும் பொழுது அவர் உன் வழிமரபினரை பல்கிப் பெருகச்செய்வேன் என்று கூறியதை நினைவு படுத்தி அவர்களுக்காக வேண்டுகின்றார். அவரும் தனது மனதை மாற்றிக் கொண்டு அவர்களை மன்னித்து விடுகின்றார். இதே போன்று நினிவே நகர மக்களையும் அழிக்க யோனா என்னும் தீர்க்கதரிசி மூலம் தெரிவித்து, அவர்கள் நோன்பிருந்து வேண்டினார்கள் அவரும் தனது மனதை மாற்றிக்கொள்கிறார். இதன் மூலமாக எவ்வாறான பாவத்தில் சிக்கிக் கொண்டாலும் மனமாறி மன்னிப்பு வேண்டுவோமாயின் மன்னிப்பின் நிற்சயத்தை பெற்றுக் கொள்வோம். இன்று பல அழிவுகள், விரோதங்கள் ஏற்படுவதற்கு காரணம் எமக்கென்று ஒரு மனநிலையை உருவாக்கி எமக்கு விருப்பம் போன்ற வகையில் வெவ்வேறான விதங்களில் தெய்வங்களை வழிபடுதல், இவற்றைத்தான் இறைவன் வெறுக்கின்றார். இத்தவக்காலங்களிலும் அவர் சுமந்து சென்ற சிலுவைப் பயணமானது கல்லும், முள்ளும், கரடு முரடு நிறைந்ததுமாகக் காணப்பட்டது. அவ்வாறான துன்பத்தின் நிமித்தமே எமக்கு நிரந்தரமான விடுதலையை பெற்றுத்தந்தார். அன்று இஸ்ராயேல் மக்கள் தமக்கென்று ஒரு சிலையை உருவாக்கி வணங்கியதுபோன்று அல்லாமல் இறைவன் ஒருவரே அவரே எம்மைப்பாதகாத்து வழிநடத்துவா்ா என்று விசுவசித்து வாழ்வோம்.